


*குழந்தை*’ என்று பாரதி பாடியது போல் கம்பன் தமிழினிலே தான் சுகித்திருந்த விதத்தை உலகறியப் பதிப்பித்துப் பெருந்தொண்டைப் புரிந்துள்ளார் உரையாசிரியர்.

ஆதிமூலமே ராமபிரானாக அவதரித்தது. அதன் காதை வால்மீகி என்ற முனிவர் மூலமாய் வெளி வந்தது. பழனியப்பன் மூலவரையும் மறக்கவில்லை; மூலத்தையும் துறக்கவில்லை. **‘கொற்ற வில் ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்’** என்ற வரிக்குப் பொருளெழுதும்போது, ‘உலகத்தையே தாங்கினவன் இப்பொழுது ஒரு வில்லைத் தாங்கினான்’ என்ற நயத்தினை தனியே எடுத்துக் காட்டுகின்றார். கூடவே, ‘இரு தோள்களிலும் அம்பறாத் தூணிகளைக் கட்டிக் கொண்டிருந்த ராமனின் தோற்றம், முத்தலை நாகத்தின் தோற்றத்தை ஒத்திருந்தது என்பார் வால்மீகி’ என்று ஆதி காவியத்தில் கூறப்பட்டுள்ள கருத்தையும் சேர்ந்தே வழங்குகின்றார். “தியாக சீலனாகிய ராமபிரானின் திருமுகத்தை நாகமுடன் ஒப்பிட வால்மீகிக்கு எப்படி மனம் வந்தது?’ என்று யாரும் திகைக்காமல் இருக்கவே ‘உலகம் தாங்கினான்’ என்று கம்பன் உரக்கச் சொன்னாரோ?” என்று உரைக்கத் தோன்றுகிறது நமக்கு. புராணப்படி, ‘சங்கர்ஷணன்’ என்ற நாகத்தின் வடிவில்தான் நாரணன் இப்பூதலத்தைச் சுமக்கின்றான். **‘ஆதி படைத்தவை தாங்கி நின்றானே’** என்று சைவம் இதனைச் சிவபரமாய்க் கூறும்.

பழனியப்பன் எதனையும் மேலோட்டமாக விளக்கியிருப்பதாய் நம் சிற்றறிவுக்கு எட்டவில்லை. மிதிலையிலிருந்து அயோத்திக்கு விரைந்து வந்த தூதுவர்கள் தயரதன் முன் ‘**செல்வனைப் புகழ்ந்தனர்**’ என்று கம்பன் பாடியுள்ளார். இது காறும் இச்செய்யுளுக்கு உரை வகுத்த பலர், இவ்விடத்தே, ‘அத்தூதுவர்கள் ராமனைப் புகழ்ந்தனர்’ என்றே விளக்கம் கூறியிருக்க, பழனியப்பனோ, ‘மன்னன் அடி வணங்கியெழுந்து, அவனது மெய்க் கீர்த்திகள் சொல்லிப் புகழ்தலே வழக்கம். ஆதலின் தசரதனைப் புகழ்ந்தனர் என்று கொள்ளப்பட்டது’ என்கின்றார். இதுவே பொருத்தமான விளக்கமாய் நம் புந்திக்குள் முந்துகிறது. ஏனெனில் அடுத்த வரியிலேயே, ‘**அரச! நின் புதல்வர் போய பின்...**’ என்றந்தத் தூதுவர்கள் ராமனை படர்க்கையில் கூறுவதாகக் கம்பன் பாடுவதால், ‘நின் புதல்வர்’ என்று பிரித்துச் சொல்லும் தூதர்கள், ராமனை எப்படிப் புகழ்ந்திருப்பர்? பலே பழனியப்பன்!

மீட்சிப் படலத்தில் பரதனிடம் கோசலை கூறுவதாக அமைந்துள்ள, ‘**இறக்கையும், சிலர் ஏகலும்**’ என்ற ஒரே பாடலுக்கு திருக்குறள், மணிமேகலை, பழமொழி என்று பல்வேறு நூல்களிலிருந்து சான்று காட்டி, தான் சான்றோன் என்பதை நிரூபிக்கின்றார் உரையாசிரியர். இதே தோரணையைப் பல பாடல்களுக்கான விளக்கங்களிலும் கண்டுவக்கும்போது இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமை, அருணை மீதிட்ட சோதியாய் ஒளிர்கின்றது. உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை.


பழனியப்பன்

மொத்தம் ஒன்பது தொகுதிகள்! பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள்! அத்தனைக்கும் இத்தனை விரிவான விளக்கங்கள்! பரம பதம் நல்கும் பரமனின் புகழ் கூறும் பாடல்கள் அனைத்தையும் பதம் பிரித்துப் பதிப்பித்துள்ளதால், ‘இதம் இதம்’ என இன்றைய தமிழரும் படித்துணரப் பெரும் வாய்ப்பு! இத்தனையையும் தனியொரு மனிதராகச் செய்திருக்கிறார் உரையாசிரியர். இவரது பணியை ஆதரிப்பதும், இவர் தொண்டை உலகோர்க்கு எடுத்துரைப்பதும், இப்புத்தகங்களை வாங்கிப் பயனுறத் தூண்டுவதும், நாமும் படித்து ராமபிரானை வேண்டுவதும் மெய்யான தமிழ்த் தொண்டாகும் என்பதில் ‘உளுந்தளவும்’ ஐயம் இல்லை.

ஓர் சிறு வியப்பு! துவாபர யுகத்தின் இறுதிக் காலமே கண்ண பரமாத்மாவின் காலமென்பதையும், அது ஐயாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதென்பதையும், கடலில் மூழ்கிய துவாரகையை ஆய்வு செய்து அறிஞர்களே அறிவியல் பூர்வமாக ஒப்புக் கொண்டு அறிவித்துவிட்டனர். வால்மீகியும், ராமபிரானும் கண்ணன் காலத்துக்குப் பற்பல நூற்றாண்டுகள் முற்பட்டோர் என்பதே ஆன்மீக உலகின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனால் இவர்களிருவரும் கி.பி. 3-4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என உரையாசிரியர், தனது முன்னுரையில் கூறுவது வியப்பை ஏற்படுத்துகிறது. ஒரு வேளை பள்ளத்தூரார் வேண்டுமென்றே ஒரு திருஷ்டிப் பொட்டைத் தனது படைப்பிற்கு வைத்துவிட்டாரோ?

எது எவ்வாறிருப்பினும், ‘**உம்பரோடு இம்பர்காறும் உலகம் ஓர் ஏழும் ஏழும்**’ ஏத்தும் வண்ணம் தமிழினுக்கும், குறிப்பாக கம்ப நாட்டாழ்வானுக்கும் திருத்தொண்டு செய்துள்ள பழ. பழனியப்பன், தனது உரையினைப் படிப்பார் மனதில் மட்டுமின்றி, தமிழன்னையின் மடிப்பாகத்திலும் அகலாது அமர்கின்ற தவத்தினைச் செய்துவிட்டார் என்பது உறுதி!

**வெளியீடு** : சாந்த மங்கை பதிப்பகம்,
23/10, பழைய பேங்க் ஆஃப் பரோடா தெரு, அம்பத்தூர்,
சென்னை-600053. மொபைல் : 98408 68543

**நூல்கள் கிடைக்குமிடம்** : திருமகள் நிலையம், புதிய எண் : 11, பழைய எண் : 5, சௌந்தரராஜன் தெரு, தி.நகர், சென்னை-600017. தொலைபேசி : 24342899, 23427696.

கம்பராமாயணம் பாகம்-1 பாலகாண்டம்; பக்:972; விலை:ரூ.460. பாகம்- 2 அயோத்தியா காண்டம்; பக்: 808; விலை:ரூ.380. பாகம்- 3 ஆரண்ய காண்டம்; பக்: 816; விலை:ரூ.380. பாகம்- 4 கிஷ்கிந்தா காண்டம்; பக்: 728; விலை:ரூ.345. பாகம்- 5 சுந்தர காண்டம்; பக்:944; விலை:ரூ.415. பாகம்- 6 யுத்தகாண்டம் பகுதி-1; பக்:932; விலை:ரூ.410. பாகம்- 7 யுத்தகாண்டம் பகுதி-2; பக்: 985; விலை:ரூ.435. பாகம்- 8 யுத்தகாண்டம் பகுதி-3; பக்:940; விலை:ரூ.410. பாகம்- 9 யுத்தகாண்டம் பகுதி-4; பக்:320; விலை:ரூ.165. ஒன்பது தொகுதிகளையும் சேர்த்து வாங்குபவர்களுக்கு 20% சிறப்பு விலைக்குறைப்பு உண்டு.

**– மருதவாணன்**